# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

செய்தி வெளியீடு எண். 20/2006 நாள் 16.10.2006

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் 13.10.2006 மற்றும் 15.10.2006 தேதிகளில் இரண்டு கட்டமாக நடைபெற்றது. இத்தேர்தலில் மொத்தம் 71.53 சதவீதம் வாக்குகள் பதிவாகின. கிராம பகுதிகளில் வாக்குப்பதிவு சதவீதம் 76.06 ஆகவும், நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவு சதவீதம் 65.25 ஆகவும் உள்ளது.

**வாக்குப்பதிவு சதவீதம்**

| | |
|---|---|
| ஊரக உள்ளாட்சிகள் | 76.06% |
| பேரூராட்சிகள் | 72.57% |
| நகராட்சிகள் | 66.49% |
| மூன்றாம்நிலை நகராட்சிகள் | 65.93% |
| மாநகராட்சிகள் | 57.59% |

மாவட்ட வாரியாக வாக்குப்பதிவு விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது. ஆண் வாக்காளர்கள் 71.86 சதவீதமும் பெண் வாக்காளர்கள் 71.20 சதவீதமும் வாக்குப்பதிவு செய்துள்ளனர். வாக்குப்பதிவு 80458 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. இதில் பல்வேறு காரணங்களுக்காக 90 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிட்ட வாக்குச் சாவடிகளில் 17.10.2006க்குள் வாக்குப்பதிவு முடிக்கப்படும். வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகள் அனைத்தும் தகுந்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு கொண்டு வரப்பட்டு, பாதுகாப்பான அறைகளில் வைக்கப்பட்டு காவல்துறையினரால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 18.10.2006 அன்று 792 வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனைத்து வாக்குகளும் எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கை காலை 8.00 மணி அளவில் துவங்கும்.

18.10.2006 அன்று வாக்கு எண்ணிக்கை துவங்குவதால் முடிவுகள் அன்று முற்பகலிலிருந்தே அறிவிக்கப்படும். வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான அறிவிப்பு உரிய படிவத்தில் வழங்கப்படும். அத்துடன் 28.10.2006 அன்று நடைபெறவிருக்கும் மேயர் / துணை மேயர், தலைவர் / துணைத் தலைவர் போன்ற பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல் கூட்ட அறிவிப்பும் முறைப்படி

வழங்கப்படும். இதனை அனைத்து வெற்றி பெற்ற வேட்பாளர்களும் தவறாது பெற்றுச் செல்லும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் முடிவு குறித்த அதிகார பூர்வ அறிக்கை மற்றும் தேர்தல் முடிவு அறிவிப்பு ஆகியவற்றை 20.10.2006க்குள் கண்டிப்பாக அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவித் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

25.10.2006 அன்று சட்டப்பூர்வமாக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கான நாளாக தேர்தல் அறிவிக்கையில் தெரிவித்துள்ளதால், அனைத்து வெற்றிப் பெற்ற வேட்பாளர்களும் மேற்படி நாளில் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு பதவிப்பிரமாண உறுதிமொழி/உறுதியுரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

28.10.2006 அன்று மறைமுகத் தேர்தல் நடைபெறும் கூட்ட அரங்கினுள் அதிகாரமளிக்கப்பட்டவர்களைத் தவிர அந்நியர் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

# வாக்குப்பதிவு சதவிகிதம்

| வரிசை எண் | மாவட்டம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 59.23 | 50.78 | 55.03 |
| 2 | கோயம்புத்தூர் | 68.89 | 64.71 | 66.81 |
| 3 | கடலூர் | 79.16 | 78.51 | 78.83 |
| 4 | தர்மபுரி | 75.62 | 74.68 | 75.15 |
| 5 | திண்டுக்கல் | 75.36 | 73.19 | 74.26 |
| 6 | ஈரோடு | 76.47 | 71.68 | 74.07 |
| 7 | காஞ்சிபுரம் | 71.79 | 69.08 | 70.43 |
| 8 | கன்னியாகுமரி | 63.34 | 70.04 | 66.66 |
| 9 | கரூர் | 81.08 | 81.81 | 81.45 |
| 10 | கிருஷ்ணகிரி | 76.72 | 75.53 | 76.13 |
| 11 | மதுரை | 67.44 | 66.73 | 67.08 |
| 12 | நாகப்பட்டினம் | 74.33 | 77.18 | 75.76 |
| 13 | நாமக்கல் | 76.72 | 74.78 | 75.73 |
| 14 | பெரம்பலூர் | 78.32 | 82.70 | 80.58 |
| 15 | புதுக்கோட்டை | 76.28 | 79.75 | 78.04 |
| 16 | இராமநாதபுரம் | 64.53 | 74.05 | 69.36 |
| 17 | சேலம் | 75.40 | 73.58 | 74.50 |
| 18 | சிவகங்கை | 66.29 | 73.98 | 70.25 |
| 19 | தஞ்சாவூர் | 73.20 | 75.95 | 74.59 |
| 20 | நீலகிரி | 67.03 | 65.33 | 66.16 |
| 21 | தேனி | 73.10 | 73.01 | 73.06 |
| 22 | திருவண்ணாமலை | 74.15 | 71.70 | 72.91 |
| 23 | திருச்சிராப்பள்ளி | 71.04 | 71.41 | 71.23 |
| 24 | திருநெல்வேலி | 68.43 | 72.37 | 70.44 |
| 25 | திருவள்ளூர் | 70.92 | 68.79 | 69.86 |
| 26 | திருவாரூர் | 75.91 | 79.54 | 77.73 |
| 27 | தூத்துக்குடி | 66.79 | 67.50 | 67.16 |
| 28 | வேலூர் | 76.65 | 76.91 | 76.78 |
| 29 | விழுப்புரம் | 77.77 | 76.64 | 77.20 |
| 30 | விருதுநகர் | 74.70 | 76.07 | 75.39 |
| **மாநிலம் முழுவதும்** | | **71.86** | **71.20** | **71.53** |